


பயணத்தில் இயேசுவுடன்

# இயேசுவுடன் சாமானியராக...

# வாழ்ந்து காட்டுவோம். வாருங்கள்......
# ஆக்கம் : கிருபாவளன்

சிலுவைப்பாதை கிறிஸ்துவின் பாடுகளைத் தியானிக்க, அவருடைய பாடுகளோடு ஒன்றிக்க உதவும் ஒரு புனித சாதனம். நம் பாவங்களுக்கான மன வருத்தலை ஏற்படுத்தும் ஒரு வழிபாடு. மனந்திரும்பலுக்கான ஒரு பக்தி - முயற்சி. இத்தகைய கண்ணோட்டத்தில் மட்டுமே நாம் இந்த அரிய , பக்தி முயற்சியைப் பயன்படுத்தியுள்ளோம். சிலுவைப்பாதையை மனவலிமையை ஏற்படுத்தும் சாதனமாக, மனவுறுதியை தருகிற வழிபாடாக மாற்ற முயல்வோமா?

பிறக்கின்ற போதே அழுகையோடு பிறப்பவன் மனிதன் மட்டுமே. துன்பம் அவனை இடைவிடாது துரத்துகிறது. துன்பத்தைத் துய்த்து உணராதவர்கள் நம்மில் யாரும் இருக்க முடியாது. ஆனால் என்ன ஆறுதல்! துன்பத்தில் கிறிஸ்தவன் தனித்திருப்பதில்லை. அவனுக்கு ஓர் துணையுண்டு.

''நம்முடைய குறைபாடுகளைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்லர், நம் தலைமைக் குரு . மாறாக, அவர் நம்மைப்போல் ஒருவராய் இருப்பதால் பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் சோதனை துன்பங்களுக்கு உட்பட்டவரானார்.'' (எபி 4:15) உடல் வருத்தம், மன வருத்தம், ஏழ்மை, இயலாமை, தனிமை, தவிப்பு, துரோகம், அவமானம், கைவிடப்பட்ட நிலை என நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு துன்பமும் அவர் அறிந்தவையே. நம் கண்ணீரின் அர்த்தத்தை, அவர் அறிவார். நம் இதயத்தின் கனத்தை அவர் புரிவார். காரணம் நமக்கு முன்பாகவே அவர் அவற்றைக் கடந்து வந்தவர். துன்பத்தில் நமக்கோர் துணையுண்டு என்ற துணிவோடு அவர் முன் செல்ல நாம் அவரைத் தொடர்வோமா!

# புரிந்து கொள்ளப்படாத நிலை

*

**“அஞ்சாதே ! நான் என்றும் உன்னோடு "(ஏசா 43 : 5)**

*முதல் நிலை :*

*மனிதன் :- ஆண்டவரே! என்னை யாருமே சரியாகப் புரிந்து கொள்வதில்லை. என் சொல் செயல் அனைத்திற்குமே தவறான அர்த்தங்கள் தரப்படுகின்றன. நன்மை செய்ய முற்படும் போதெல்லாம் "வேடம் போடுகிறான் பார், நடிக்கிறான் பார், நல்ல பெயர் வாங்கப் பார்க்கிறான் பார்." என தவறான பார்வைகளே என் மேல் திரும்புகின்றன. ஒதுங்கிப் போனால் "கண்டு கொள்ளாமல் போகிறான் பார். பெரிய இவன்' என்ற நினைப்பு ' என்ற வசைமொழிகள். ஊரோடு ஒத்துப் போனால் “கொஞ்சமாவது சுயபுத்தி வேண்டாம்! தனக்கென்று ஒரு அறிவு வேண்டாம்!" என்ற அர்ச்சனைகள். இப்படி எதைச் செய்தாலும் நான் குற்றவாளியாகவே காணப்படுகிறேன். எப்போதுமே குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்படுகின்றேன்.*

*இயேசு :- என் மகனே! என் மகளே! உன் நிலையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. குற்றவாளிக் கூண்டில் நீ தனியாக நிற்கவில்லை. நிறுத்தப்பட்டிருப்பது, நானும் தான். உண்மையைச் சொன்னேன், தேவதூஷணம் என்றனர். நன்மையைச் செய்தேன், சட்டத்தை மீறினேன் என்றனர். பாவிகளை நேசித்தேன், அவர்களோடு விருந்துண்டேன், குடிகாரன் என்றனர். புதுமைகள் செய்தேன், பேய்களின் துணைவன் என்றனர். இறுதியாய் இப்போது சாவுக்கே தீர்ப்பிடப்படுகிறேன். நான் கலங்கவில்லை. காரணம் தந்தையின் விருப்பத்தையே நான் நிறைவேற்றினேன். நீயும் கலங்காதே! உனக்குத் துணையாய் நான் இருக்கின்றேன். உலகமே உன்னை குறை கூறினாலும் நான் உன்னை அங்கீகரிப்பேன்.*

*ஜெபம் : இயேசுவே! எனக்குத் துணையாய் நீர் உள்ளபோது நான் எதற்கு அஞ்ச வேண்டும்? நீர் முன்னே செல்ல நான் உம்மைத் தொடரும் துணிவை எனக்குத் தாரும். ஆமென்.*

# காரணங்கள் தேடும் நிலை*

## "நாமே உன்னைத் தூய்மையாக்கும் நீரூற்று"(செக் 13:1)

*இரண்டாம் நிலை* :

*மனிதன் :- ஆண்டவரே! என்னால் முடியவில்லை . எனக்கு மட்டும் ஏன் இத்தனை துன்பங்கள்? உடலை வருத்தும் நோய்கள். மனதை வருத்தும் பிரச்சனைகள். நிம்மதியைக் குலைக்கும் நிகழ்வுகள். இவையெல்லாம் உம் கோபத்தின் வெளிப்பாடுகளா? என் பாவத்தின் தண்டனைகளா? "அன்பும் அருளும் உள்ளவர், சினம் கொள்ள தாமதிப்பவர்" என்றுதானே உம்மை அறிந்துள்ளோம். பின் ஏன் என்னை மட்டும் இவ்வளவு சோதிக்கிறீர்? தவறு செய்தவர்கள் பலர் நலமாய் வாழ்வதில்லையா? அநீதர்களும் அக்கிரமிகளும் அக்களிப்புடன் வாழும் இந்நாட்களில் என்னை மட்டும் இத்தனை சுமைகளால் நெருக்குவதேன்? சுமைகளை சுமந்து சுமந்தே சோர்ந்து போனேன்.*

*இயேசு :- சுமைகளுக்கான காரணத்தைத் தேடும் என் அன்பு மகனே! மகளே! உன் வலி எனக்குப் புரிகிறது! உன் சோர்வு எனக்கு அர்த்தமாகிறது. ஆனால் என் சிலுவையின் அர்த்தம் உனக்குப் புரிகிறதா? என் மீது சிலுவை சுமத்தப்படுகிறதே! காரணம் புலப்படுகிறதா? பாவமே அறியாத என்மீது சிலுவை சுமத்த தந்தை எப்படி இசைந்தார்? தவித்தேன் நானும் ஆனால் தயங்கவில்லை. சிலுவையை தண்டனையின் சின்னமாய் நான் பார்க்கவில்லை. மீட்பின் சாதனமாய் பார்த்தேன். நீயும் அப்படியே பார்க்கப் பழகிக் கொள். துன்பங்கள் உன்னை செம்மைப்படுத்தும். நீ பொன். எனவே தான் புடமிடப்படுகிறாய். கலங்காதே !*

*ஜெபம் :- இயேசுவே! என் சுமைகளின் பாரத்தை நான் பார்க்காமல் உம் சிலுவை தரும் பலத்தைப் பெற எனக்குக் கற்றுத்தாரும். ஆமென்.*

# துவண்டு போன நிலை

## "நமது கை உன்னை நடத்திச் செல்லும்"(தி. பா.139 :10)

*மூன்றாம் நிலை :*

*மனிதன் :- ஆண்டவரே! தடுமாறுவதும் தவறுவதுமே வழக்கமாகிப் போய் விட்டது. வாழத்தான் எனக்கும் ஆசை. ஆனால் வீழ்ந்து போகிறேன். முன்னேற முனைந்து மூன்றடி வைத்தால் ஆறடி இறங்கி அதல பாதாளத்தில் வீழ்கிறேன். உடலும் உள்ளமும் சோர்ந்து போகின்றன. என் சக பயணிகள் என்னைக் கடந்து செல்ல, நான் மட்டும் பின் தங்கிப் போவது ஏன்? ஆசைகள் இல்லாமல் இல்லை . நல்லெண்ணமும் நிறையவே உண்டு. ஆனால் நிஜத்தில் நிகழ்வதென்ன? வழுக்கல்களும் சறுக்கல்களும் தான். தோல்விகளை மட்டுமே சந்தித்தால் தெம்பு எங்கிருந்து வரும்? துவண்டு போகிறேன் இறைவா, துவண்டு போகிறேன்.*

*இயேசு:- தோல்விகளால் துவண்டிருக்கும் என் அன்பு மகனே! மகளே! உன் சோர்வின் காரணம் எனக்குப் புரிகிறது. ஆனால் கலங்காதே! சர்வ வல்லமை படைத்த நானே என் சிலுவைப்பாதையில் சறுக்கி விழுந்தேன். "தைரியமாயிருங்கள் " என எல்லோரையும் தேற்றிய நானே - திடமிழந்து தடுமாறினேன். ஆனால் தடுமாறியது என் உடல் மட்டுமேயன்றி என் உள்ளம் அல்ல. விழுந்த நான் எழுந்தேன். இன்னும் வீரியமாய் நடந்தேன். எத்தனை முறை வீழ்ந்தோம் என்பதல்ல முக்கியம். வீழ்ந்த போதெல்லாம் எழுந்தோமா என்பது தான் முக்கியம். தடுமாற்றத்திலும், தோல்வியிலும் எல்லோர்க்கும் பங்குண்டு. இறைமகனாகிய எனக்குக் கூட விதிவிலக்கில்லை. எனவே துவண்டு போகாதே! துணிவாய் எழுந்து நட.*

*ஜெபம் :- இயேசுவே! வீழ்வது அவமானமல்ல, வீழ்ந்தே இருப்பது தான் அவமானம். எழுந்து நடக்க எனக்கு நீர் துணையிருப்பீர் என்று நம்பி நடைபயில் எனக்குக் கற்பியும் ஆமென்.*

# பிறருக்கு பயனற்ற நிலை

## ."நம்பிக்கையின் வாயிலாக மாற்றுவேன் " (ஓசே 2: 15)

*நான்காம் நிலை :*

*மனிதன் :- ஆண்டவரே! என்னால் என்ன பயன்? யாரையும் சந்தோஷப்படுத்த முடியாதவன் நான். என் உறவுகளைக் கூட திருப்திப்படுத்த முடியவில்லை. நான் வளர்ந்தால் குடும்பம் ஓங்கிவிடும் என்று கனவு கண்ட பெற்றோருக்கு என்னால் ஏமாற்றம். மணந்தால் வாழ்க்கை மலர்ந்து விடும் என்று என்னைக் கைபிடித்த துணைக்கு ஏமாற்றம். கை நிறைய பொருட்களுடன் கனிவைத் தருவார் என எதிர்பார்க்கும் குழந்தைகளுக்கு ஏமாற்றம். என் இயலாமையும் இல்லாமையும் என்னை மட்டுமல்ல, என்னைச் சார்ந்தவர்களையும் சோகப்படுத்துகின்றன. சோகம் மட்டுமே மிஞ்சினால் வாழ்க்கையால் என்ன பயன்?*

*இயேசு :-உன் இயலாமையைக் குறித்து கலங்கிப் போயிருக்கம் என் அன்பு மகனே! மகளே! உன் சோகத்தை என்னால் உணர முடிகிறது. ஆனால் கொடுப்பதும் பெறுவதும் மட்டும் வாழ்க்கையல்ல. மாறாக இருப்பதே, நல்லோராய் இருப்பதே வாழ்க்கை. "மகத்துவம் மிக்க மன்னர் எனப்படுவார்'' என்று தான் என்னைக் குறித்து என் அன்னை கேள்வியுற்றார். ஆனால் இப்போது என் அன்னை பார்ப்பது மண்ணோடு மண்ணாக மாண்பிழந்து நிற்கும் என்னைத் தான். ஆனால் அவள் ஒதுங்கவில்லை . என்னை நெருங்குகிறாள். என் துன்பத்தில் ஆறுதலாய் நெருங்குகிறாள். காரணம், எங்கள் உறவு உள்ளதை அடிப்படையாய் கொண்டதல்ல, உள்ளத்தை அடிப்படையாய் கொண்டது. உன்னால் உன் உறவுகளை, பொருட்களால், வசதியால்,அந்தஸ்தால், தோற்றத்தால், திருப்திப்படுத்த முடியாமல் போகலாம். ஆனால் உறவுகளின் மையத்தில் உள்ளமும், உள்ளம் நிறைய அன்பும் இருந்தால், தாழ்விலும் வாழ்விலும் உடனிருக்க முடியும். உவப்புடன் இருக்க முடியும். எனவே கலங்காதே! நானும் என் அன்னையும் உன்னோடிருக்கிறோம்.*

*ஜெபம் :- இயேசுவே! உடைமைகள் அல்ல உடனிருத்தலே உறவின் மையம் என்பதைப் புரிந்து வாழ்விலும் தாழ்விலும் உடனிருக்க எமக்குக் கற்றுக்தாரும்.ஆமென்.*

# சார்ந்து வாழ வேண்டிய நிலை

**“கழுகுகளின் இறக்கைகளின் மேல் ஏந்துவேன்”(வி.ப.19 :4)**

*ஐந்தாம் நிலை :*

*மனிதன் :- ஆண்டவரே! இனிமேலும் முடியாது! இதற்கு மேலும் இயலாது! சுயமாக என்னால் எதையும் சாதிக்க முடியவில்லை . தோள் கொடுத்து தாங்க, தக்க துணையும் இல்லை. மதிப்பை இழந்து, மாண்பை இழந்து, பிறர் தயவைநாடி வாழ்வதும் ஒரு வாழ்க்கையா? வாய் பொத்தி கை கட்டி இரண்டாம் தர மானிடனாய் வாழ எனக்கு முடியவில்லை . தக்க தருணத்தில் என்னைத் தாங்கினால் நான் வாழ முடியும். ஆனால் அப்படித் தாங்க ஒரு துணையில்லை. தனித்து விடப்பட்டுவிட்டோமோ என்ற பயம் என்னைக் கவ்வுகிறது. என் குடும்பத்தார் கூட "பயனற்றவன், உதவாக்கறை , என்ன செய்வது? எல்லாம் தலையெழுத்து" என முணுமுணுத்தபடியே என்னோடு வாழ்வது புரிகிறது. இனிமேலும் இயலாது ஆண்டவரே, என்னால் இனிமேலும் முடியாது.*

*இயேசு:- தனிமையில் தவிக்கும் என் அன்பு மகனே! மகளே! உன் தவிப்பு எனக்குப் புரிகிறது! நம்மால் முடியவில்லையே! மற்றவரை நம்பி வாழ வேண்டியுள்ளதே என ஏங்கும் உன் ஏக்கமும் புரிகிறது. பிறரது உதாசினத்திற்கு உள்ளாகும் போது ஏற்படும் உறுத்தலும் எனக்குப் புரிகிறது. நானும் சிலுவையைச் சுமக்க முடியாது தவித்தேனல்லவா? அப்போது இன்முகத்தோடு உதவ ஆளில்லை. வேண்டாவெறுப்புடன் தான் சீமோன் எனக்கு உதவினான். இருப்பினும் நான் சீமோனின் உதவியை ஏற்றுக் கொண்டேன். பிறரைச் சார்ந்து வாழ்வது ஒரு இழிவல்ல. சுயகவுரவம் என்ற பெயரில் சுவர்களை எழுப்புவது அறியாமை. உதவி பெறுவதும் உதவுவதும் மனிதாபிமானத்தின் பரிமாணம். மனிதன் ஒரு சமூகப்பிராணி. எனவே சார்ந்து வாழ்வது கேவலம் அல்ல. அதுவே மனித இயல்பு. உதவ கற்றுக் கொள். உதவியை ஏற்கவும் கற்றுக்கொள்.*

*ஜெபம்:- இயேசுவே!மனிதனின் உதவியை இறைவனாம் நீரே மறுக்கவில்லை. சார்ந்து வாழ்தல் அவமானமல்ல, அதுவே சாதிக்க வழி என்று உணரச் செய்தருளும். ஆமென்.*

# பிறரால் ஒதுக்கப்பட்ட நிலை

## ''உன்னைக் கைநெகிழ மாட்டேன் "(யோசு 1: 5)

*ஆறாம் நிலை :*

*மனிதன் : ஆண்டவரே! நான் விரும்பப்படாதவனாக இருக்கிறேன். ஒரு காலத்தில் என்னோடு பழகுவதை , என்னோடு இருப்பதை பெருமையாக நினைத்தவர்கள் எல்லாம் இப்போது என்னைக் கண்டாலே ஒதுங்கிப் போகிறார்கள். ஒரு காலத்தில் என்னை வசீகரமானவன், சிறந்தவன், உயர்ந்தவன், பண்பாளன் என்று சொன்னவர்கள் எல்லாம் இப்போது முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள். உண்மை தான், என் நிலை தாழ்ந்திருப்பது உண்மை தான். நான் மனத்தால், உடலால், உணர்வால் காயப்பட்டு நொந்து நைந்து போய் இருப்பது உண்மை தான். ஆனால் இப்போதல்லவா என் நண்பர்களும் சுற்றமும் என் காயத்தைத் துடைத்து உடலை வருடி மனதைக் குளிர வைக்க வேண்டும். ஆனால் அவர்களோ ஒளிந்து கொள்கிறார்களே! ஆண்டவரே! இந்த ஒதுக்குதலை என்னால் தாங்க முடியவில்லை.*

*இயேசு :- ஒதுக்கப்படுவதாய் உணர்ந்து வெதும்பியிருக்கும் என் அன்பு மகனே! மகளே! உன் காயத்தின் வலி எனக்குப் புரிகிறது. நானும் இதை அனுபவித்தவன்தானே. என் உடல் கோரமாகி முகம் அலங்கோலமாகி காயத்தால் களையிழந்து இருந்த போது என் கண்கள் தேடின. என் காயத்தைத் துடைப்பவர்க்காய் தேடின. என்னால் பலன் பெற்றவர்கள், என்னால் குணம் பெற்றவர்கள், என்னால் பசி தீர்ந்தவர்கள், என்னைப் பின் சென்றவர்கள் என எத்தனையோ பேரை என்னால் நினைவு கூற முடிந்தது. ஆனால் அவர்கள் தான் என்னை நினைவு கூறவில்லை. தவித்த வாய்க்கு தண்ணீர் தருவதைப்போல் ஒரே ஒரு பெண்மணி என் முகத்தைத் துடைக்கிறாள். அவளிடம் நான் என் சாயலைக் கண்டேன். எனக்கு ஆறுதல் தருவதற்கென தந்தையால் அனுப்பப்பட்டவள் வெரோனிக்காள். உனக்கும் அவர் ஆறுதல் அளிப்பார். கலங்காதே!*

*ஜெபம் :- இயேசுவே! காயப்பட்டவனாய் காய்ந்து கிடக்கும் நான் ஆறுதல் எங்கிருந்து வரும் என ஏங்குகிறேன். ஆண்டவரே! எனக்கு ஆறுதல் உம்மிடமிருந்தே வரும் என்ற தெம்பை எனக்குத் தாரும். ஆமென்.*

# பரிகாசத்துக்கு உள்ளாகும் நிலை

## "வலிமை பெறு...ஆண்டவரே முன் செல்பவர்"(இ.ச.31:6)

*ஏழாம் நிலை :*

*மனிதன் :- ஆண்டவரே! மீண்டும் தோற்றுப்போகிறேன். தோல்விகளுக்கு மேல் தோல்விகள். சோதனைகளுக்கு மேல் சோதனைகள். மீளவும் மீளவும் வீழ்கிறேன். விழ வேண்டும் என்று எனக்கென்ன ஆசையா! இல்லையே! என் பலவீனத்தால் அல்லவோ வீழ்கிறேன்."பரவாயில்லை எழுந்திரு. நீ நன்றாகத்தான் முயன்றாய்! என்ன செய்வது?" என என்னைத் தேற்றுவதற்கு , தாங்குவதற்கு ஒருவருமில்லை.மாறாக என்னைத் திட்டி தீர்ப்பவர்கள் தான் உள்ளனர். " கொஞ்சமாவது அறிவு இருக்கிறதா பார்! மீண்டும் அதே தவறை செய்கிறான். மீண்டும் தோற்றுப் போகிறான். இவன் தேற மாட்டான்" என்று என் பலவீனத்தை பரிகாசம் செய்பவர்கள் தான் உள்ளனர். ஆண்டவரே! இந்த தோல்வியை, தோல்வியால் விளையும் பரிகாசத்தை என்னால் தாங்க முடியவில்லை.*

*இயேசு :- பரிகாசத்துக்கு உள்ளாகியிருக்கும் என் அன்பு மகனே! மகளே! உன் இதயத்தின் வேதனையை நான் உணர்கிறேன். நானும் இரண்டாம் முறை வீழ்ந்த போது இந்த வேதனையை அனுபவித்தேனே! எப்படியாவது கல்வாரியை எட்டிவிட வேண்டும், தந்தையின் சித்தத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்ற ஆசை இருக்கத்தான் செய்தது. ஆனால் உடல் தான் ஒத்துழைக்கவில்லை . சீமோனின் உதவியும் வெரோனிக்காளின் ஆறுதலும் கூட போதவில்லை. சுற்றிப் பார்க்கிறேன். ஏளனம் செய்வோரும் பரிகசிப்பவருமே உள்ளனர். நான் அவர்களைப் பார்ப்பதை நிறுத்திவிட்டேன். என இலட்சியப் பயணத்தின் இலக்கைப் பார்த்தேன். கல்வாரியின் முகட்டைப் பார்த்தேன். விண்ணைப் பார்த்தேன். என் தந்தையின் திருமுக அன்பைப் பார்த்தேன். எழுந்து நடக்கலானேன். நீயும் துணிவை இழக்காதே! மனித முயற்சிகள், மனித உதவிகள் தோற்றுப் போகும் போது கலங்காதே! மேலே பார். உன் இலக்கைப் பார். உனக்கு பலன் தரும் இறையைப் பார்.*

*ஜெபம் :- இயேசுவே! என்னை சுற்றியிருப்போர் என்னை ஏளனம் செய்தாலும் ஒரு தாய் தேற்றுவது போல் நீர் என்னைத் தேற்றுவீர், தாங்குவீர் என உறுதி கொள்ள கற்றுத்தாரும். ஆமென்.*

# இரங்குதற்குரிய நிலை

## உங்களைத் திக்கற்றவர்களாய் விடமாட்டேன்"(யோவா14:18)

*எட்டாம் நிலை :*

மனிதன் :- ஆண்டவரே! நான் வெட்கத்தால் தலைகுனிந்துள்ளேன். கூனிக்குறுகிப்போயிருக்கிறேன். "எப்படி வாழ்ந்தான், இப்படி ஆகி விட்டானே! இவனுக்கா இப்படி ஒரு நிலை. இவருக்கு இப்படி ஆகும் என யார் நினைத்திருப்பர்" என்று மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும் போது நான் நிலை குலைந்து போகிறேன். மற்றவர்களின் கழிவிரக்கம் என்னை கலங்கவைக்கிறது. என்னைப் பார்த்து இரக்கப்படுவோர் உண்மையிலேயே என் மேல் அக்கறை கொண்டிருந்தால் பச்சாதாபத்தோடு நில்லாமல் உண்மையில் எனக்கு உதவியிருப்பார்கள். இவர்களோ என்னை வெறும் காட்சிப் பொருளாக மட்டுமே பார்க்கிறார்கள். மற்றவர்கள் நகைப்புக்கு ஆளாகிவிட்டோமே என்று நான் பரிதவிக்கிறேன்.

இயேசு :- இரங்குதற்குரிய நிலையில் இருக்கும் என் அன்பு மகனே! மகளே! மற்றவர்கள் உன்னைப் பார்த்து பரிதாபப்படும் போது உனக்கு ஏற்படும் அவமானம் எனக்கு புதிரல்ல, புதிதுமல்ல. என் பாடுகளின் போது எருசலேம் மகளிர் என்னைப் பார்த்து அழுதனரே. அப்போது நானும் இத்துயரை அனுபவித்தேன். ஆனால் அவர்கள் என் உடல் துயரைப் பார்த்த வேளையில் நான் அவர்கள் அகத்துயரைப் பார்த்தேன். எனவே நான் அவர்களுக்கு ஆறுதல் கூற முனைந்தேன். பிறர் துயரைக் கண்டு பரிதாபப்படுவதை விட அவர்களது துயருக்கு காரணம் அறிந்து அதை துடைப்பதே சிறந்தது என்று உணர்ந்தேன். என் பாடுகளுக்குக் காரணமான பாவங்களுக்காய் அழச் சொன்னேன். உண்மையில் இரங்குதற்குரியவர்கள் அவர்கள் தான் என்பதை எண்பித்தேன். ஆறுதல் தர வந்த அவர்களுக்கு நான் ஆறுதல் கூறினேன். கண்களை விரித்துப் பார். இவ்வுலகில் உன்னைக் காட்டிலும் இரங்குதற்குரியவர்கள் பலர் உண்டு. உனக்குக் கீழ் எத்தனையோ பேர். அவர்கள் துயரைக் காணக் கற்றுக் கொள். உன் துன்பம் தானாக மறையத் தொடங்கும்.

ஜெபம் :- இயேசுவே! ஆறுதல் பெறுவதைக் காட்டிலும் ஆறுதல் தருவதிலும், புரிந்து கொள்ளப்படுவதை விட புரிந்து கொள்வதிலும், அன்பு செய்யப்படுவதைவிட அன்பு செய்வதிலும் இன்பம் காண கற்றுக் தாரும். ஆமென்.

# சோர்ந்து போன நிலை

## “உனக்கு வலிமை அளிப்பேன்..தாங்குவேன்" (ஏசா 41:10)

*ஒன்பதாம் நிலை :*

மனிதன் :- ஆண்டவரே! மீண்டும் வீழ்கிறேன் நான். இனிமேலும் என்னால் முடியுமா என்ற அச்சம் என்னை ஆட்கொள்கிறது. என் மேல் எனக்கே நம்பிக்கை குறைந்துவிட்டது. திகைப்பில் தவிக்கும் என்னைத் தூக்கிவிட , பிடித்து நிறுத்த யாரேனும் உளரா என்றால் "போதும் போதும், அனுபவித்தது போதும். இனிமேலும் வேண்டாம், இந்த விஷப்பரீட்சை ." என எனக்குத் தடை போடத்தான் ஆட்கள் தயாராக உள்ளனர். அவர்கள் சொல்வதில் நியாயம் இருப்பதாக எனக்கே கூட தோன்றுகிறது. நம்மால் இனி ஜெயிக்க முடியாது. நம்மால் இனி வாழ முடியாது என நானே கூட நினைப்பதுண்டு. போதும் இந்த வாழ்க்கை என தற்கொலை பற்றி கூட நினைத்ததுண்டு, முயன்றதுண்டு. வாழ்க்கையின் அர்த்தம் எனக்குப் பிடிபடவில்லை . பிடிபடவேயில்லை .

இயேசு :- வேதனையின் விளிம்பில் தத்தளிக்கும் என் அன்பு மகனே! மகளே! உன் வேதனையின் ஆழம் எனக்கு புலப்படுகிறது. மூன்றாவது முறையாக நான் விழுந்தபோது நானும் கூட சற்று கலங்கிப்போனேன். ஆனால் கெத்சமனியை உடனே நினைவு கூர்ந்தேன். கூடுமானால் இந்தத் துன்பக்கலம் என்னை விட்டு நீங்கட்டும் என்று ஜெபித்ததை நினைத்தேன். இந்த துன்பக் கலத்தைத் தந்த தந்தை அதைக் குடிப்பதற்கான சக்தியையும் தருவார் என்று நம்பி எழுந்தேன். நிகழ்வதெல்லாம் என் விருப்பம் அன்று தந்தையின் விருப்பம் என்று உணர்ந்தேன். சக்தி பிறந்தது, பயணத்தைத் தொடர்ந்தேன். ஒடுக்கமான வழி தடைகள் நிறைந்தது தான். ஆனால் இலக்கு சரியானது. வெற்றி உறுதியானது அகன்ற பாதையின் சுலபம் உன்னை அலைக்கழிக்கும் போது களைப்பு வரலாம், பின்னடைவு வரலாம், விரக்தி கூட வரலாம். ஆனால் பாதையை மட்டும் மாற்றிவிடாதே . காரணம் இது உன் திட்டம் அல்ல, இறைத்திட்டம்.

ஜெபம் :- இயேசுவே! என் வலுவின்மையில் தான் உம் வலிமை வெளிப்படும். உம் அருள் ஒன்றே எனக்குப் போதும் என்ற மனவலிமையோடு நீர் எனக்கு அமைத்திருக்கும் பாதையில் தொடர்ந்து செல்ல வரம் தாரும். ஆமென்.

# தன்மானம் இழந்த நிலை

## "நமது கண்களுக்கு நீ விலையேறப் பெற்றவன்"(ஏசா 43:4)

*பத்தாம் நிலை :*

மனிதன் : ஆண்டவரே! அவமானத்தின் உச்சத்தில் நான் அங்கலாய்க்கிறேன். பணம், பதவி, சொத்து, சுகம், உறவு, ஊர் என எல்லாவற்றையும் இழந்து இப்போது என்னையே நான் இழக்கும் நிலைக்கு வந்துவிட்டேன். என் சுய மரியாதை, கவுரவம், இவற்றைக் கூட இப்போது நான் இழக்க வேண்டியுள்ளது. இழந்த பணத்தையோ, பொருளையோ மீண்டும் எப்படியாவது ஈட்டிக் கொள்ளலாம். ஆனால் மானத்தை இழந்தால் என் செய்வது? மானம் என்பது உயிரைக் காட்டிலும் உயர்ந்ததன்றோ ? அதையும் இழந்து என்னால் எப்படி வாழ முடியும்? போதும் ஆண்டவரே! இனிமேலும் என்னால் முடியாது. மயிர் நீத்தால் மான்கூட உயிர் விடுமாம். நான் மனிதன் அன்றோ ! எப்படி இந்த அவமானத்தைத் தாங்குவது. முடியவில்லை ஆண்டவரே! என்னால் முடியவில்லை .

இயேசு : அவமானத்தால் அல்லல்படும் என் அன்பு மகனே! மகளே! உன் துயரத்தின் உச்சம் எனக்குப் புரிகிறது. நானும் அவமானத்தை அனுபவித்தவன் தானே! இதுவரை என் உடலை வருத்தியவர்கள், வசைமொழிகளாலும், கசையடிகளாலும் என்னை வருத்தியவர்கள், இப்போது என் ஆடையைக் களைந்து என் மனித மாண்பையே குலைக்கிறார்கள். என்னை நிர்வாணப்படுத்தி நிர்மூலமாக்கி அவமானத்தின் உச்சத்தை அடையச் செய்கிறார்கள். அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறேன். மனிதர் முன்னிலையில் நான் அவமானப்பட்டாலும், ஏளனத்துக்குள்ளானாலும் என் தந்தை மனம் குளிர்ந்து " இவரே என் அன்பார்ந்த மகன் " என்று சொல்வதை உணர்ந்தேன். என் அழுகையை அக்களிப்பாய் மாற்றவும், என் அவமானத்தை மாண்பாய் மாற்றவும் வல்லவரே இவற்றை அனுமதித்துள்ளார் என்றுணர்ந்தேன். நீயும் தோய்ந்து போகாதே ! அவமானத்தின் அர்த்தம் இப்போது புரியாது. அவகாசம் கொடு. இறுதியில் ஆனந்தம் வரும்.

ஜெபம் : இயேசுவே ! என் அழுகையை அக்களிப்பாகவும் அவமானத்தை களி நடனமாகவும் மாற்ற வல்ல நீர் என்னுடன் இருக்கும் போது அவமானத்தைக் கண்டு அஞ்சாமல் வாழ அருள் தாரும். ஆமென்.

# நன்றி மறந்த நிலை

## "நானோ உன்னை...பெருமைப்படுத்துவேன்"(ஏசா 60:15)

*பதினொன்றாம் நிலை :*

மனிதன் : ஆண்டவரே! எனக்கு நிகழ்வதை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. என்னைச் சுற்றி இருப்போரை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. என் கையால் உதவி பெற்றவர்களே கரம் நீட்டி என்னைக் குறை சொல்கிறார்கள். என் கால்களால் யாரைத் தேடிச்சென்று ஆறுதல் படுத்தினேனோ, அவர்களே எனக்கெதிராய் விரைந்து வருகிறார்கள். யாருக்காக நான் வாழ்ந்து வந்தேனோ, வாழ்கிறேனோ, அவர்களே, என் பிள்ளைகளே, என் உடன் பிறப்புகளே, எனக்கு நெறுக்கமானவர்களே என்னை எப்படியெல்லாம் நொறுக்க முடியுமா அப்படியெல்லாம் நொறுக்குகிறார்கள். என்னை எப்படியெல்லாம் காயப்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் காயப்படுத்துகிறார்கள். இந்த நன்றி கெட்ட உலகில் யாருக்காக வாழவேண்டும். செத்துப் போகலாம் போல் இருக்கிறது! போதும் ஆண்டவரே!போதும்.

இயேசு : நன்றி கெட்டவர்களின் நச்சுச் செயல்களால் காயப்பட்டிருக்கும் என் அன்பு மகனே! மகளே! உன் காயத்தின் ரணம் எனக்குப் புரிகிறது. இதையேத்தான் நானும் அனுபவித்தேன். ஆசீர்வதித்த என் கைகளை ஆணிகளால் அறைந்தார்கள். நற்செய்தியைப் பறைசாற்ற நடமாடிய என் கால்களைத் துளைத்து வதைத்தார்கள். அவர்களுக்காகவே துடித்த என் இதயத்தை ஊடுருவக் குத்தினார்கள். அவர்களுக்காகவே வாழ்ந்த என்னை வதைத்து சிலுவையில் அறைந்தார்கள். ஆனால் அதை நான் உவப்புடன் ஏற்றுக்கொண்டேன். கைம்மாறு கருதி நான் எதையும் செய்ததில்லை. எனக்கு கைம்மாறு என் தந்தையிடம் உண்டு! என்பது எனக்குத் தெரியும். நீயும் துவண்டு போகாதே! விண்ணகத்தில் உள்ள உங்கள் தந்தை உங்கள் நற்செயல்களுக்கு தக்க கைம்மாறு அளிப்பார்.

ஜெபம் : இயேசுவே! இந்த உலகம் என்னை அவமதித்தாலும், அவப்பெயர் தந்தாலும், துயரச் சிலுவையில் அறைந்தாலும் உம்மைப் போல் நம்பிக்கை தரும் சிலுவையை தழுவ அருள் தாரும். ஆமென்.

# நிறைவடையாத நிலை

## ஆண்டவருக்கு அஞ்சுவோர்க்கு எக்குறையும் இராது(தி.பா34:9)

*பன்னிரெண்டாம் நிலை :*

மனிதன் :- ஆண்டவரே! நிறைவற்றவனாய் நான் தவிக்கிறேன். எத்தனை கனவுகளோடு எத்தனை ஆசைகளோடு எத்தனை திட்டங்களோடு நான் என் வாழ்க்கையை ஆரம்பித்தேன். ஆனால் எதை நான் சாதித்தேன்? என் வாழ்க்கை முடிவதற்கு முன்பு கூட நான் எதையும் செய்ய மாட்டேன் போல் தோன்றுகிறதே ! என் தாகங்கள் எதுவும் தீர்க்கப்பபடாமல் தவிக்கிறேன். என்னை தவிக்க வைப்பது மனிதர்கள் மட்டும் தானா? இல்லை ஆண்டவரே ! பல நேரங்களில் நீரும் கூட என்னை கைவிட்டு வீட்டீரோ என்று எண்ணத் தோன்றுகிறது. நீர் கூட என் பெருமூச்சுகளைக் கண்டுகொள்ளாதவராய், என் கதறல்களைக் காணாதவராய், என் ஜெபங்களைக் கேட்காதவராய் இருப்பதைப் போல் உணர்கிறேன். ஆண்டவரே! நீரும் எனக்கு துணை செய்யாவிடில் வேறு எங்கு போவேன்?

இயேசு : நிறைவற்றவனாய் தவிக்கும் என் அன்பு மகனே! கைவிடப்பட்டவள் போல் கதறும் என் அன்பு மகளே ! உன் நெஞ்சை அடைக்கும் துக்கம் எனக்குப் புரிகிறது. 'தாகமாயிருக்கிறது' என நானும் கூட தவித்தேனே ! "என் இறைவா ! என் இறைவா ! ஏன் என்னைக் கை நெகீழ்ந்தீர்!" என நானும் கூட கதறினேனே ! மரண வேளையிலும் ஆன்மாக்களை ஆதாயம் செய்யும் என் பணி நிறைவடையாத ஏக்கம், தாகம் என்னை வாட்டியது. எப்போது தான் என் தாகம் தீரும் என்ற பரிதவிப்பில் நான் கதறினேன், "ஏன் என்னைக் கை நெகீழ்ந்தீர் ' என்று. ஆனால் சட்டென்று உணர்ந்தேன். கைவிடப்பட்டவன் அல்ல நான். என்னையே கையளித்தவன். தந்தை எனக்குக் கொடுத்த துன்பக் கலத்திலிருந்து சுவைத்து எல்லாம் நிறைவேறிற்று' என்று என் பங்கை செவ்வனே முடித்து என் உயிரைக் கையளித்தவன் நான். நீயும் உன்னையே கையளித்து விடு. உன் பங்கைச் செய். மிச்சத்தை இறைவன் நிறைவாக்குவார்.

ஜெபம் : இயேசுவே ! சாதனைகளை வைத்து நீர் சன்மானம் தருவதில்லை. அவனவன் பங்கை ஆற்றிய விதத்தை வைத்தே ஆய்ந்தறிகிறீர் என்பதை உணர்ந்து என்னையே கையளிக்க கற்றுத் தாரும். ஆமென்.

# கனவுகள் சிதைந்த நிலை

## "உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் ''(யோவா 16 : 20)

*பதின்மூன்றாம் நிலை :*

மனிதன் : ஆண்டவரே ! ஏமாந்து போனேனே ! என் பிள்ளைப் பருவத்திலும், பள்ளிப் பருவத்திலும் முதல்வனாய் இருப்பேன் என்றிருந்தேன். மிஞ்சியது ஏமாற்றம் தான். என் படிப்புக்கும் , தகுதிக்கும் தகுந்த பணியும், பணி உயர்வும் கிடைத்து வாழ்வில் உயர்வேன் என்று எதிர்பார்த்தேன். ஏமாந்துப் போனேன். எனக்கு ஏற்ற நல்ல துணை கிடைத்து, இல்லற வாழ்வு இனிக்கப் போகிறது என்று கனவு கண்டேன். கசப்பும், கண்ணீ ரும் தான் மிஞ்சியது. என் கனவுகளெல்லாம் கலைந்து போயின. என் நம்பிக்கையெல்லாம் வீணாய்ப் போனது. "அஞ்சாதே! நான் உன்னோடு இருக்கிறேன்" என்ற உம் வார்த்தையெல்லாம் அர்த்தமற்றவை தானா? புரியவில்லை ஆண்டவரே! ஒன்றும் புரியவில்லை .

இயேசு :- தோற்றுப் போய் துவண்டிருக்கும் என் அன்பு மகனே! மகளே ! உன் விரக்தி எனக்குப் புரிகிறது. உன் மனப் புழுக்கத்தை நான் உணர்கிறேன். என் தாயைப் பார். இறந்த என் உடலை அவள் மடிமீது கிடத்துகிறார்கள். அவள் மனதில் என்ன போராட்டம் நடந்திருக்கும். எண்ணிப்பார். மங்கள வார்த்தையின் போது " அவரது அரசுக்கு முடிவே இராது" என்று அருளப்பட்டது. ஆனால் இப்போதோ எல்லாம் முடிந்து விட்டது. அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை . ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது. ' உமது வார்த்தையின்படி ஆகட்டும் ' என்று சொன்னதன் விலை இப்போது புரிந்தது. ஏமாற்றம் தோல்வியாகிவிட முடியாது. சிதைவு அழிவாகி விட முடியாது. அதுவே புத்துயிரின் வித்து என்பதை புரிந்து கொண்டாள். நீயும் அவள் பிள்ளை அல்லவா ? பயப்படாதே ! வியாகுலங்கள் வீர முழக்கமாய் விரைவில் மாறும்.

ஜெபம் : இயேசுவே ! ஏமாற்றத்தின் போதும், தோல்வியின் போதும் உம் திட்டம் எனக்குப் புரிவதில்லை. ஆனால் உம் அன்னையைப் போல் ' ஆகட்டும் ' எனச் சொல்லுகிற ஆற்றல் தாரும். ஆமென்.

# முகவரி இழந்த நிலை

## ‘கருணையும் அருளும் வாழ்நாளெல்லாம் தொடரும்’(தி.பா. 23:6) *பதினான்காம் நிலை :*

மனிதன் :- ஆண்டவரே ! முகவரி இல்லாத மனிதனாய் அடையாளமே இல்லாத ஒரு பிறவியாய் நான் வாழ்கிறேன். சிலரை அவர்களது மிகுந்த செல்வத்தை வைத்து அடையாளம் காட்டுகின்றனர். சிலரை அவர்களது முதிர்ந்த அறிவால் அறிந்து கொள்கின்றனர். இன்னும் சிலரை அவர்களது அபார ஆற்றலும், திறமையும் அடையாளம் காட்டுகிறது. எதுவுமே இல்லாமல், எதிலுமே சிறக்காமல், எதையுமே சாதிக்காமல் ஒரு வீணான வாழ்வை வாழ்கின்றோமோ என்ற பயம் என்னை ஆட்டிப் படைக்கிறது. என் பிறப்பால் பயனடையாத இவ்வுலகம் இறப்பால் நஷ்டப்படவும் போவதில்லை. இந்த வெற்று வாழ்க்கை என்னை வேதனைப்படுத்துகிறது. இந்த வேதனையை என்னால் தாங்க முடியவில்லை . தாங்கவே முடியவில்லை .

இயேசு : - இல்லாமையாலும், இயலாமையாலும் இன்னலுறும் என் அன்பு மகனே! மகளே! உன் வலி எனக்குப் புரிகிறது. விலாசமே இல்லாதவனாய் நீ இருப்பதைப் போல் நானும் இருந்தேனே. மாட்டுக் கொட்டகையில் பிறந்த நான் இரவல் கல்லறையில் துயில்கிறேன். ஏழ்மையின் வேதனை எனக்குப் புரிகிறது. அகில உலகத்தையும் படைத்து எங்கும் நிறைந்திருக்கும் எனக்கே இந்த உலகம் இடம் தரவில்லை . செல்வம், பேர், புகழ், கல்வி இவற்றால் இந்த உலகில் இடம் பிடிக்கவில்லை என்று ஏங்குகிறாயே ! இந்த உலகம் உன் நிரந்தர இடம் இல்லை . இது ஒரு பயணம் தான். நீ இடம் பிடிக்க வேண்டியது உன் தந்தையின் இல்லத்தில். அங்கு செல்வமும் சீரும் சிறப்பும் நுழையாது. பண்பும் பாசமும் புண்ணியமுமே நுழையும். அழிந்து போகாத செல்வம் சேர்த்து விட்டாயா ? அதைச் சேகரி! உன் தந்தையின் இல்லிடத்தில் உறைவிடங்கள் பலவுண்டு. உனக்காய் ஒன்றை நான் தயார் செய்கிறேன். கலங்காதே!

ஜெபம் : இயேசுவே ! இவ்வுலகில் ஆயிரம் நாட்கள் வாழ்வதை விட உம் ஆலய முற்றத்தில் ஒரு நாள் வாழ்வதே மேல் என்றுணர்ந்து வாழ வரமருளும். ஆமென்.

# துணையிருக்க துயரேது!

*இயேசு :- என் அன்பு மகனே! மகளே ! உன் வாழ்க்கைப் பயணத்தில் நான் உன்னை ஒரு போதும் தனியாக விட்டதில்லை என்பதை உணர்ந்து கொண்டாயா? உயிர்ப்பிலும் நான் உன்னைத் தனியே விடமாட்டேன். உயிர்ப்பு என்பது எங்கோ , என்றோ இல்லை. இங்கே இப்போது உள்ளது. அஞ்சாத நெஞ்சமும், துவளாத மனமும், தளராத நடையும் உயிர்ப்பின் அடையாளம். உயிர்த்தவனாய் வாழ புறப்படு. இருளும், கவலையும் கண்ணீ ரும் உன்னை நொறுக்கினாலும் கவலை கொள்ளாதே. உன் உதடுகளும் உள்ளமும் என்றென்றும் இதை உணர்ந்து உச்சரிக்கட்டும். ”இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் தீமையானதெதற்கும் அஞ்சேன். ஏனெனில் நீர் என்னோடு இருக்கின்றீ ர் " (தி.பா. 23 : 4).*

www.anbinmadal.org